DIRECTOR OF MUNICIPAL ADMINISTRATION
CHEPAUK, CHENNAI-5

<u>சுருக்கம்</u>

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை – தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் – அதிகாரம் அளிக்கப் பெற்ற குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில், சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் மற்றும் நரசிங்கபுரம் நகராட்சிகள், 20 பேரூராட்சிகள் மற்றும் 12 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 1,345 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தினை ரூ.270 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ1) துறை</u>

அரசாணை ( நிலை) எண். 265 நாள் 26.10. 2010
ஐப்பசி 9 திருவள்ளுவர் ஆண்டு 2041
படிக்கப்பட்டது

(1) அரசாணை (நிலை) எண்.258, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நநி2) துறை, நாள் 30.12.2009

படிக்க:

(2) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்களின் கடித எண்.கோ.050906/ஆத்தூர்–நரசிங்கபுரம்/உபொ8 திமேபி/2006, நாள் 12.10.2010)

(3) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்களின் கடித எண். எப்.50906/ஏஈ7/பிடிசி/2006, நாள் 23.10.10

---

<u>ஆணை:</u>

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தற்போது சேலம் மாநகராட்சி தனக்கென ஒரு தனிக் குடிநீர் திட்டம் செயல்படுத்த உத்தேசித்துள்ளதால், ஏற்கனவே பயனில் உள்ள கூட்டுக் குடிநீர் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நாளொன்றுக்கு 53.11 மில்லியன் லிட்டர் குடிநீரை விடுவிப்பு செய்ய முடிவு செய்துள்ளதென்றும், ஏற்கனவே உள்ள திட்டத்தில் பயன் பெறும் பயனாளிகள் மற்றும் புதிதாக கண்டறியப்பட்ட நகரக மற்றும் ஊரக பயனாளிகள் பயன்பெறும் வகையில், சேலம் மாநகராட்சியால் ஒப்பளிப்பு செய்யப்பட்ட நாளொன்றுக்கு 53.11 மில்லியன் லிட்டர் மற்றும் தற்போது குடிநீர் வழங்கப்பட்டு வரும் இதர பயனாளிகளுக்கான 31.024 மில்லியன் லிட்டர் ஆக மொத்தம் 84.134 மில்லியன் லிட்டர்

குடிநீர் வழங்கும் அளவுக்கு தற்போது புதிய திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதென்றும், இத்திட்டம் சம்பந்தமாக கீழ்க்கண்ட விவரங்களையும் தெரிவித்துள்ளார்:-

(i)காவிரி ஆற்றின் இயல்பு நீர் (நாளொன்றுக்கு 88.30 மில்லியன் லிட்டர்) மேட்டூர் அணையின் கீழ்புறம், நீர் எடுக்கும் அமைப்பின் மூலம் எடுக்கப்பட்டு கொம்புரான்காடுஎன்னும் இடத்தில் அமைக்கப்பட்டுள்ள சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு வரப்படுகிறது. சுத்திகரிக்கப்பட்ட நீர் (நாளொன்றுக்கு 84.134 மில்லியன் லிட்டர்) ஆத்தூர் நகராட்சி மற்றும் இதர பயனாளிகளுக்கும் வழங்கப்படும்.

(ii) மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தற்போது சேலம் மாநகராட்சிக்கு ஒரு தனிக் குடிநீர் திட்டம் ரூ.283.09 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு மாநகராட்சியால் மேற்கொள்ளப்– பட்டுள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்பட்டபின், சேலம் ஆத்தூர் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் சேலம் மாநகராட்சிக்கு ஒதுக்கியுள்ள நாளொன்றுக்கு 53.11 மில்லியன் லிட்டர் (முந்தைய சேலம் மற்றும் சூரமங்கலம் நகராட்சிகள் மற்றும் 39 ஊரகக் குடியிருப்புகள்) குடிநீரினைக் கொண்டு 12 பேரூராட்சிகள் மற்றும் புதிய வழியோர குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(iii) உத்தேசிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு கிடைக்கும் 84.134 மில்லியன் லிட்டர் நீரினைக் கொண்டு, தற்போது சேலம் மாவட்டத்தில் ஆத்தூர், நரசிங்கபுரம் நகராட்சிகள், 20 பேரூராட்சிகள் மற்றும் 12 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 1,345 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும்.

(iv) இத்திட்டத்தில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவு

1) நகராட்சிகள் – 90 லிட்டர்
2) பேரூராட்சிகள் – 70 லிட்டர்
3) ஊரகக் குடியிருப்புகள் – 40 லிட்டர்

10 விழுக்காடு நீர் தொழிற்சாலைகளின் தேவைக்காக பயன்படுத்தப்படும்.

(v) இத்திட்டத்தின் அமைப்புச் செலவு ரூ.270 கோடி ஆகும். ஆண்டு பராமரிப்பு செலவு ரூ.22.20 கோடி ஆகும். தற்போதைய மக்கட்தொகைப்படி (2012) தனி நபர் செலவு ரூ.2,604 எனவும் 1000 லிட்டருக்கான குடிநீர் செலவு ரூ.10.16 எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

(vi) இத்திட்டம் 2 நகராட்சிகள், 20 பேரூராட்சிகள் மற்றும் 1,345 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவற்றுள், சேலம்–ஆத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் ஏற்கனவே உள்ள பயனாளிகளான, ஆத்தூர், நரசிங்கபுரம் நகராட்சிகள், கருப்பூர், அயோத்தியாபட்டிணம், ஏத்தாப்பூர், பெத்தநாயக்கன்பாளையம், மேச்சேரி, பி.என்.பட்டி ஆகிய 6 பேரூராட்சிகள் மற்றும் 316 ஊரகக் குடியிருப்புகள் இவற்றிக்கு ஏற்கனவே வடிவமைக்கப்பட்ட குடிநீரின் அளவே வழங்கப்படவுள்ளது.

(vii) ஓராண்டு ஒப்பந்தக்காரரின் பராமரிப்பிற்குப் பின், இத்திட்டத்திற்கான பராமரிப்பு பணிகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமே மேற்கொள்ளும்.

2) மேற்கண்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநரின் செயற்குறிப்பிற்கு வாரியக்குழுமமும், அதிகாரம் அளிக்கப்பெற்ற குழுவும் ஒப்புதல் அளித்துள்ளதன் அடிப்படையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர், சேலம் மாவட்டத்தில், ஆத்தூர் மற்றும் நரசிங்கபுரம் நகராட்சிகள், 20 பேரூராட்சிகள் மற்றும் 12 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 1,345 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தை ரூ.270 கோடியில் ( மாநில அரசின் பங்களிப்பின் மூலமும் (ரூ.265.43 கோடி), உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்புத் தொகையின் மூலமும் (ரூ.4.57 கோடி) செயல்படுத்த நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் தனது மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், பேரூராட்சிகளின் இயக்குநர் தனது 23.10.2010–ஆம் நாளிட்டப்பட்ட கடிதத்தில், மேற்கூறிய திட்டத்திற்கு உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்புத் தொகையான ரூ.22.84 கோடியில், பேரூராட்சிகளின் பங்குத் தொகை, 20 சதவிகிதமான ரூ.4.57 கோடியை அளிப்பதாக ஒப்புக் கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளதோடு, மேற்படி திட்டத்திற்கான நிர்வாக ஒப்புதலை அளிக்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

3) மேற்கண்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநரின் செயற்குறிப்பினையும், அதிகாரம் அளிக்கப் பெற்ற குழுவின் தீர்மானங்களையும் அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்றுக் கொள்ள தீர்மானித்துள்ளது. அதன்படி, ரூ.270 கோடி (ரூபாய் இருநூற்று எழுபது கோடி மட்டும்) மதிப்பீட்டில், சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் மற்றும் நரசிங்கபுரம் நகராட்சிகள், 20 பேரூராட்சிகள் மற்றும் 12 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 1,345 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தினை, ரூ.265.43 கோடி (ரூபாய் இருநூற்று அறுபத்து ஐந்து கோடியே நாற்பத்து மூன்று இலட்சம் மட்டும்) மாநில பங்களிப்பின் மூலமும், ரூ.4.57 கோடி (ரூபாய் நான்கு கோடியே ஐம்பத்து ஏழு இலட்சம் மட்டும்) உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்புத் தொகையின் மூலமும் செயல்படுத்த நிர்வாக அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது. இதில் உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு ரூ.4.57 கோடி உறுதி செய்யப்படவேண்டும். மேலும், இத்திட்டத்தினை செயலாக்கம் செய்யும் ஒப்பந்தக்காரரே, ஓராண்டு பராமரிப்பினை மேற்கொள்ள வேண்டும். இவ்வோராண்டு பராமரிப்புக் காலத்தில், மின்சாரக் கட்டணம் நீங்கலாக இதர பராமரிப்பு செலவினங்கள் ஒப்பந்தக்காரரையே சார்ந்ததாகும்.

4) மாநிலப் பங்களிப்பான ரூ.265.43 கோடி, கோரிக்கை எண். 34. 04ல் புதியதாக தொடங்கப்பட உள்ள கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:

"4215 குடிநீர் வழங்கல் துப்புரவு குறித்த மூலதனச் செலவு–01. குடிநீர் வழங்கல்–800 ஏனைய செலவு– பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JY சேலம் மாவட்டத்தில் கூட்டுக் குடிநீர் திட்டத்தினை செயல்படுத்துதல் – 16.பெரும்பணிகள் (த.தொ.கு.4215 01 800.JY-1606)"

5) செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்கள் மதிப்பீடு கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார். சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர்/கணக்கு அலுவலர் மேற்கண்ட புதிய கணக்குத் தலைப்பினை தங்கள் கணக்குகளில் துவக்கிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

6) மேலே பத்தி 3ல் அமைக்கப்பட்ட செலவினம் "புதுப்பணி" குறித்த செலவினமாகும். பேரவையின் ஒப்புதல் உரிய நேரத்தில் பெறப்படும். பேரவையின் ஒப்புதலை எதிர் நோக்கி, இச் செலவினம் முதற் கண் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து தேவையான முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். தேவையான முன்பணம் கோரி உரிய படிவத்தில் நிதி (வ.செ.பொ I ) துறைக்கு விண்ணப்பிக்கும்படி செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை 2010–2011–ஆம் ஆண்டு துணை மானியக் கோரிக்கையில் சேர்ப்பதற்குரிய கருத்துருவினை நிதி (வரவு–செலவு பொது I )த் துறைக்கு அனுப்புமாறு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7) மேலும், இச்செலவினம், ரொக்கமாக வழங்கப்படாமல் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் வரவு வைக்கப்பட வேண்டும்:

"K. வைப்பீடுகளும் முன்பணமும் (b) வட்டியில்லாத வைப்பீடுகள் 8443.00 சிவில் வைப்பீடுகள் 800.ஏனைய வைப்பீடுகள் BC தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய வைப்பீடுகள். (கு.தொ.கு. 8443 00 800 BC 000(வரவு) )

8) பிரிவு அலுவலர் (பட்டியல்) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை தேவையான தொகைக்குப் பட்டியலைச் சமர்ப்பித்து, சம்பள கணக்கு அலுவலர் (தலைமைச் செயலகம்) மூலம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் தன்வைப்பு கணக்குக்கு எண்.6184513396 பெயருக்கு காசோலையாக பெற்று வழங்க அனுமதிக்கப்படுகிறார்.

9) மேலும், 2011–12 ஆம் ஆண்டிற்கு தேவைப்படும் தொகையினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்துடன் கலந்து ஆலோசித்து 2011–12– ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் சேர்த்திட உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10) இந்த அரசாணை நிதி அ.சா.கு.எண். 214/DS(B)/2010, நாள் 26.10.2010 மற்றும் கூடுதல் பேரேட்டு எண்.1236 (ஆயிரத்து இருநூற்றி முப்பத்தி ஆறு) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரியம், சென்னை–9
நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
முதன்மைச்செயலரின் தனிச் செயலர், சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2)துறை, சென்னை–9
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை–5
நிதி (நநிமகுவ) துறை, சென்னை–9
நிதியமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
மாவட்ட ஆட்சியர், சேலம் மாவட்டம்.
இகோ/உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

26/10/10
பிரிவு அலுவலர்.
26/10/10